பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 07 வெள்ளிக்கிழமை 23.07.2021 கதிர் 126

## முடக்கத்தில் இருந்து 2 பகுதிகள் விடுவிப்பு

மாத்தளை மாவட்டத்தில் தனிமைப்படுத் தப்பட்டிருந்த இரு கிராமங்கள் இன்று காலை 6 மணி முதல் அமுலாகும் வகையில் விடு விக்கப்பட்டுள்ளன என்று கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான

☞2

## கோப்பாயில் 9 பேர் கைது!

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம், கோப்பாய் பொலிஸ்பிரிவில் இன்று அதிகாலை 2 மணி தொடக்கம் காலை 6 மணி வரை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புத் தேடுதலில் 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களில் மூவர் அண்மைய வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

☞2

# கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள்

## நீதி கோரி யாழில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

ஈழத்தமிழர்கள் மீதான இலங்கை அரசின் இனப் படுகொலைக்கு நீதி வேண்டும் என வலியுறுத்தி யாழ். மத்திய பஸ் நிலையம் முன் பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெ டுக்கப்பட்டது.

'கறுப்பு ஜூலை 23' நினைவு நாளை முன் னிட்டு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணிமுதல் முற் பகல் 11 மணி வரை இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள்,

☞2




# டயகம சிறுமியின் மர்ம மரணம் தொடர்பில் ரிஷாத்தின் மனைவி உள்ளிட்ட மூவர் கைது

## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

**வீட்டு வேலைக்கு அமர்த்தப்பட்ட 16 வயது சிறுமி உயிரிழந்தமை தொடர்பில் முன் னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.**

**நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் தந்தையும், சிறுமியை வேலைக்கு அமர்த்திய தரகரும் கைதுசெய்யப்பட்டவர்களில் அடங்குகின்றனர் என்றும், கைதான மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார்.**

☞2



## பாலியல் துஷ்பிரயோக முறைப்பாட்டில் ரிஷாத் பதியுதீனின் மைத்துனர் கைது!

முன்னாள் அமைச்சரும் நாடாளு மன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீ னின் மைத்துனர் பாலியல் துஷ்பிரயோக முறைப்பாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்ததாவது:-

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வேலைக் கமர்த்தப்பட்டிருந்த 16 வயது சிறுமி உயிரி ழந்தமை தொடர்பில் இதுவரை 20 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த வாக்குமூலங்களூடாக பல விடயங் கள் அம்பலமாகியுள்ளன.

அதற்கமைய, அண்மையில் உயிரி ழந்த சிறுமி வீட்டு வேலைக்கு அமர்த்தப் படுவதற்கு முன்னர்,

☞2

## யாழில் இரவோடு இரவாக

## கறுப்பு ஜூலை சுவரொட்டிகளை கிழித்தெறிந்த அரசின் படைகள்




(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

கறுப்பு ஜூலையை நினைவுகூரும் வகையில் யாழ்ப்பாணத்தில் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவையால் ஒட்டப்பட்ட சுவரொட்டிகள் அனைத்தும் இரவோடு இரவாகப்

☞2

## யாழ். மாநகர சபையில் அஞ்சலி



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

1983ஆம் ஆண்டு கறுப்பு ஜூலை கலவரத்தில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் உறவுகளுக்கு யாழ்ப்பாணம் மாநகர சபையில் இன்று சுடரேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

☞2

## யாழ். குருநகர் பிரதேசத்தில் சட்டவிரோத கடலட்டைத் தொழிலைக் கட்டுப்படுத்துக!

### அமைச்சர் டக்ளஸ் பணிப்புரை

(இ.கலையமுதன்)

யாழ்., குருநகர் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படுகின்ற சட்டவிரோ தக் கடலட்டை செயற்பாடுகளை உடனடியாகக் கட்டுப்படுத்துமாறு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நாரா எனப்படும் தேசிய நீரி யல்வள ஆராய்ச்சி நிறுவனத்தால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதிக ளைத் தவிர்ந்த ஏனைய

☞2




## வன்முறைக் குழுவினர் அராலியில் அட்டூழியம்

### ஓட்டோவுக்கும் தீ வைப்பு

(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ்

☞2



## 3 கோடி 20 லட்சம் ரூபா கேரள கஞ்சாவுடன் வெற்றிலைக்கேணியில் ஒருவர் மாட்டினார்

யாழ்., வடமராட்சி கிழக்கு, வெற்றிலைக்கேணி பகுதியில் 3 கோடி 20 லட்சம் ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார் என்று கடற்படையினர் அறிவித்துள் ளனர்.

சந்தேகநபரிடமிருந்து 107 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

☞2



## பாலியல் துஷ்பிரயோக முறைப்பாட்டில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்கனவே இரண்டு பெண்கள் அங்கு தொழிலுக்கு அமர்த்தப்பட்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள தரகரே அந்த இரண்டு யுவதிகளையும் கொழும்புக்கு அழைத்து வந்துள்ளார்.

32வயதானபெண்ணும், 22வயதான யுவதியும் ஏற்கனவே வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

டயகமபகுதியைசேர்ந்த 22வயதான யுவதி 2015ஆம் ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் தொழில் புரிந்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் தான் இரு தடவைகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டார் என்று அவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

யுவதியின்வாக்குமூலத்துக்குஅமைய, ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மதவாச்சி பகுதியைச் சேர்ந்த 44 வயதான குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது என வழங்கப்பட்ட வாக்குமூலத்துக்கமைய, குறித்த வீட்டுக்குச் சென்று விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. - என்றார்.

## வன்முறைக் குழுவினர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரிவுக்குட்பட்ட அராலி வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் வாள்வெட்டுக் குழுவினரால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

நேற்றிரவு 10.45 மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வாள்கள் மற்று இரும்புக் கம்பிகளுடன் வந்த நால்வர் வீட்டு ஜன்னலின் கண்ணாடிகள் மற்றும் ஓட்டோவின் கண்ணாடிகளை உடைத்ததுடன் ஓட்டோவுக்கும் தீ மூட்டியுள்ளனர்.

இதனால் ஓட்டோ பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

வீட்டில் உள்ளவர்கள் தூக்கத்தில் இருந்தவேளை குறித்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் நிகழும்போது விழித்துக் கொண்ட வீட்டுக்காரர்களும் அயல்வீட்டினரும் இணைந்து வன்முறைக் குழுவினரைத் துரத்தியவேளை அவர்கள் தப்பித்துச் சென்றுள்ளனர்.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## யாழ். குருநகர் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதேசங்களில் இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அதனை மீறுகின்ற வகையிலும் கடற்றொழில் சங்க ஒழுங்கு விதிகளை மீறும் வகையில் சுமார் 39 இழுவை வலைப்படகுகள் கடலட்டை தொழிலில் ஈடுபட்டு வருகின்றன என்று குருநகர் கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகளால் கடற்றொழில் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டிருந்தது.

இதையடுத்து, தடைசெய்யப்பட்ட தொழில் முறைகள் அனைத்தும் கட்டுப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இழுவை வலைப் படகுகளைப் பயன்படுத்தி கடலட்டை தொழிலில் ஈடுபடுகின்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு, கடற்றொழில் திணைக்களத்தின் யாழ். மாவட்ட பிரதானி ஜெ. சுதாகரனுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

## 3 கோடி 20 லட்சம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கட்டைக்காடு -வெற்றிலைக்கேணி பகுதியில் முன்னெடுக்கப்பட்ட சுற்றிவளைப் பின்போது, சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து கேரள கஞ்சா அடங்கிய 16 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணையின்போது, வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த கேரள கஞ்சா அடங்கிய மேலும் 24 பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் முள்ளியான் பகுதியைச் சேர்ந்த 33 வயதான நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவர் மேலதிக விசாரணைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## யாழ். மாநகர ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ். மாநகர மேயர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தலைமையில் குறித்த அஞ்சலி நிகழ்வு நடைபெற்றது.

இதில் பிரதி மேயர் ரி.ஈசன் உள்ளிட்ட மாநகர சபை உறுப்பினர்கள் சிலர் கலந்து கொண்டு படுகொலையான தமிழர்களை நினைவு கூர்ந்து, சுடரேற்றி, மலர் தூபி அஞ்சலி செலுத்தினர்.

## கறுப்பு ஜூலை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் புலனாய்வாளர்கள் ஆகியோரால் முற்று முழுதாகக் கிழித்தெறியப்பட்டுள்ளன.

இந்தச் செயலைத் தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை கண்டித்துள்ளது.

ஜனநாயக நாட்டில் அன்று தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அநீதிகளை நினைவுகூருவதற்கு இலங்கை அரசு தடை போடுகின்றது என்றால் இங்கு ஜனநாயகம் எங்கு உள்ளது? இலங்கை அரசின் மிலேச்சத்தனமான இந்தச் செயலை மிகவும் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தமிழ்த் தேசியப் பண்பாட்டுப் பேரவை தெரிவித்துள்ளது.

## டயகம சிறுமியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தச்சம்பவம்தொடர்பாகபொரளைப் பொலிஸாருக்கு மேலதிகமாக இரண்டு பொலிஸ் குழுக்கள் விசாரணைகளை முன்னெடுக்கின்றனர்.

இதற்கமைய, கொழும்பு தெற்கு சிறுவர் மற்றும் மகளிர் பணியக அதிகாரிகள் குழுவும் கொழும்பு தெற்கு குற்றத் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் குழுவும் தொடர்ந்தும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றன.

சம்பவம் தொடர்பில் இதுவரை 20 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

உயிரிழந்த சிறுமியின் பிரேத பரிசோதனை அறிக்கை மற்றும் வங்கிக் கணக்கறிக்கை ஆகியவற்றின் அடிப்படையிலும் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கமைய, இதுவரை முன்னெடுக்கப்பட்டுள்ள விசாரணைகளுக்கு அமைய, குறித்த சிறுமி கொழும்புக்கு அழைத்து வரப்பட்டு துன்புறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் ஆள்களை விற்பனை செய்யும் குற்றமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச் செயல் தொடர்பில் ரிஷாத் பதியுதீனின் மனைவியான 46 வயதான பெண்ணும், மனைவியின் தந்தையான 70 வயது முதியவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிறுமியை டயகமவிலிருந்து கொழும்புக்குத் தொழிலுக்காக அழைத்து வந்த தரகரான 64 வயதான நபரும் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டுள்ளவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 72 மணித்தியால தடுப்புக் காவல் உத்தரவை பெற எதிர்பார்த்துள்ளோம் - என்றார்.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்படும் விசாரணைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்தின் பிரதி சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸின் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே வீட்டுப் பணிப் பெண்களுக்கான குறைந்தபட்ச வயதெல்லையை 18 வரை அதிகரிப்பது தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதற்கான சட்டத்திருத்தத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கோப்பாயில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பிரியந்த லியனகேயின் வழிகாட்டலிலும் அவரது பங்கேற்புடனும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியின் பங்களிப்புடன் இந்த விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 9 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களில் 22, 23 மற்றும் 25 வயதுடைய மூவர் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

ஏனைய 6 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

## கறுப்பு ஜூலை தமிழின ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் எங்கே?, இன அழிப்புக்கு நீதி வேண்டும், அரசியல் கைதிகளை விடுதலை செய், வெளியேறு வெளியேறு இராணுவமே வெளியேறு உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## முடக்கத்தில் இருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக மாத்தளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகஹகொட்டுவ கிராம சேவகர் பிரிவின் அகலவத்த, ஹரஸ்கம ஆகிய கிராமங்களே விடுவிக்கப்பட்டுள்ளன.

மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

076 443 8619 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை – அதிகாலையும் மாலையும் – உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## பயங்கரத்தைப் பேணும் சட்டம்

'வேலிக்கு ஓணான் சாட்சி' என்பார்கள். பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பில் அரசின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்த இந்தச் சொல்லாடலைப் பயன்படுத்தியிருக்கின்றது தமிழீழ விடுதலைக் கழகம் (ரெலோ). சரியான சொல்லாடல்தான்.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்பர். தன்னைக் கெட்டழிப்பது என்ற சிந்தனையில் ஊறி நிற்பவனுக்கு என்ன நல்லயோசனை கொடுத்தாலும் அவன் திருந்தப் போவதில்லை. அவன் கெட்டழிந்தே தீருவான். அப்படிப்பட்ட ஒரு பிடிவாதத்தில் – அதிகாரத் திமிரில் – நின்று உழலுகின்றது கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகார பீடம்.

தன்னுடைய பௌத்த, சிங்களப் பேரினவாத வெறித்தனத்தை சிறுபான்மையினர் மீது திணித்து, தன்னுடைய அரசியல் பழிவாங்கல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டபடி, சட்டத்தின் ஆட்சி நடப்பதாகக் காட்டிக் கொண்டு எதேச்சதிகாரத்தைக் கட்டவிழ்த்து விடுவதற்கு ஆட்சித் தலைமைக்கு பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் தேவைப்படுகின்றது. அதனால் அந்தச் சட்டத்தை விட முடியாது என அழுங்குப் பிடியாக நிற்கின்றது அது.

அதன் எதிர்பார்ப்பை நிறைவு செய்திருக்கின்றது அந்த நோக்கத்தைக் கொண்ட ஜனாதிபதி நியமித்த ஜனாதிபதி ஆணைக்குழு.

தமிழ்ப் பெண்மணி ஒருவரையும் உள்ளடக்கிய ஜனாதிபதி ஆணைக்குழுவே அந்தப் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைத் தொடர்ந்து நீடிக்கப் பரிந்துரைத்துள்ளது என்பது வரலாற்றில் பதிவு செய்யப்படவேண்டிய – கவனிக்கப்பட வேண்டிய – விடயமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீடிக்கும் தனது போக்கினால் – தன்னுடைய எதேச்சதிகாரச் செயற்பாட்டினால் – நாட்டுக்குப் பயங்கரமான பின்னடைவை இந்த ஆட்சிப் பீடம் வாங்கித் தரப்போகின்றது என்பது கண்கூடு.

இந்தப் பயங்கரவாதச் சட்டமே பயங்கரங்கள் மிகுந்தது. அரச பயங்கரவாதத்து சட்டப் பாதுகாப்பு வழங்கும் – நீதியின் ஆட்சிக்கே பயங்கரமான பாதிப்பை ஏற்படுத்தும் – தகைமை கொண்டது இது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இச்சட்டம் குறித்து ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் கண்ணில் மட்டும் படாமல் போன நிதர்சனம் இது.

இலங்கையின் இன்றைய இழி நிலைக்குக் கால்கோள் இட்ட அம்சங்களில் பிரதானமானது இச்சட்டம் என்பது மறைக்க கூடியதல்ல.

நீதியின் பெயரால் – சட்டவாட்சி என்ற மூடி மறைப்பின் கீழ் – அரச பயங்கரவாதமும் ஆட்சியாளர்களின் எதேச்சாதிகாரமும் பிரயோகிக்கப்படுவதற்கான மார்க்கமாக அமைவதே இந்தச் சட்டம்தான் என்பது பரகசியம்.

ஜனநாயக விழுமியங்களையும், சட்டத்தின் நீதியான ஆட்சியையும் குழிதோண்டிப் புதைத்து, அராஜகத்தையும் சர்வாதிகாரத்தையும் நிலைநிறுத்துவதற்காகவே இந்தச் சட்டத்தை சர்வதேச எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் பேணும் இந்தக் கொடுங்கோன்மைப் போக்குத் தொடருகின்றது.

ஏற்கனவே கொவிட் தொற்றுப் பேரிடரின் பின்னடைவுகளினாலும், அரசின் மிக மோசமான பொருளாதாரக் கொள்கைகள், ஊழல் ஆட்சி, மோசடி நடவடிக்கைகள் போன்றவற்றாலும் நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. மீளவே முடியாத நெருக்கடிக்குள் பொருளாதாரம் சிக்குண்டு கிடக்கின்றது.

ஆனால், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச, உள்நாட்டு எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் நீடிக்கும் தனது கொடுங்கோன்மைப் போக்கினால், மேலும் பொருளாதாரச் சிக்கலுக்குள் நாட்டை மாட்ட வைத்து நாட்டையும் மக்களையும் மீள முடியாத நெருக்குவாரத்துக்குள் தள்ளப் போகின்றது கோட்டா அரசு. ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழு வேலிக்கு ஓணான் சாட்சியம் மாதிரி அளித்திருக்கும் பரிந்துரை – பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை சில திருத்தங்களுடன் தொடரலாம் என்ற சிபாரிசு – அத்தகைய நிலைப்பாட்டைத்தான் பெறுபேறாக கொண்டு வந்து தரப்போகின்றது.

இந்தச் சட்டத்தை சர்வதேச நியமங்களுக்கு ஏற்றவாறு மாற்றாவிட்டால் ஐரோப்பிய ஒன்றியம் ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை நீக்கி விடும்.

அது நிகழ்ந்தால் தைத்த ஆடைகள், கடலுணவு உற்பத்திப் பொருள்களின் ஏற்றுமதி போன்றவை மூலம் கிட்டும் கொஞ்சநஞ்ச அந்நிய செலாவணி ஈட்டலும் கையை விட்டுப் போக நாட்டின் பொருளாதாரம் மீள முடியாதவாறு அடியோடு படுத்துவிடும்.

அதற்குத்தான் வகை செய்திருக்கின்றது இந்த ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரை.

# ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அதிருப்தி!

## அம்பிகா சற்குணநாதன் தெரிவிப்பு

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பிலான அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கும் வகையில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமையவில்லை என குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார். மனித உரிமைகள் விவகாரங்கள் தொடர்பில் கடந்த காலங்களில் நிறுவப்பட்ட ஆணைக்குழுக்கள் மற்றும் குழுக்களின் பரிந்துரைகளை மீளாய்வு செய்யும் நோக்கில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விசேட ஆணைக்குழுவொன்று நிறுவப்பட்டிருந்தது.

இந்த ஆணைக்குழுவால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இடைக் கால அறிக்கை தொடர்பில் அம்பிகா சற்குணநாதன் அதிருப்தி வெளியிட்டுள்ளார்.

குறிப்பாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் இந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமையப்பெறவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஜனநாயக ரீதியானது என வலிறுயுத்தும் வகையில் ஆணைக்குழுவின் இடைக் கால அறிக்கை அமைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மூன்று மாதங்களுக்கு மேல் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு எதிராக குற்றப் பதிவு செய்து விசாரணைகளை முடிவுறுத்த வேண்டுமென பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் சித்திரவதைக்கு உட்படுத்தி ஒப்புதல் வாக்கு மூலங்கள் பெற்றுக்கொள்ளக் கூடிய சாத்தியம் உண்டு எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படக்கூடிய சாத்தியங்கள் தொடர்ந்தும் நீடிக்கின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். நபர்களுக்கு எதிராக தடை உத்தரவுகளைப் பிறப்பிக்க பாதுகாப்பு அமைச்சருக்கு அனுமதி வழங்கும் வகையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். அரசியல் செயற்பாடுகளில் ஈடுபடுவதைத் தடை செய்தல், மேடைகளில் பேசுவதைத் தடை செய்தல் உள்ளிட்ட பல்வேறு தடைகளை பாதுகாப்பு அமைச்சரால் பிறப்பிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளார். அம்பிகா சற்குணநாதன் தனது டுவிட்டர் பக்கத்தில் இந்த விடயங்களை சுட்டிக் காட்டியுள்ளார்.

# கறுப்பு ஜூலை கவனவீர்ப்பு போராட்டமும் கருத்தாடலும்

## நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் இணையத்தில் இன்று

தமிழினத்தின் மீதான சிங்கள அரசின் திட்டமிடப்பட்ட இனப்படுகொலையாக அமைந்த 1983–கறுப்பு ஜூலையை மையப்படுத்தி கவனவீர்ப்புப் போராட்டமொன்றும், இணையவழி கருத்தாடலொன்றும் ஏற்பாடு செய்யப்பட்; டுள்ளன என நாடுகடந்த தமிழீழ அரசு தெரி வித்துள்ளது.

ஈழத்தமிழ் மக்களின் நெஞ்சங்களில் ஆறாப் பெருந்துயராகவுள்ள 1983 கறுப்பு ஜூலை தமிழின அழிப்பு நாள்களின் 38 ஆவது ஆண்டு நினைவினையொட்டி இந்த நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இன்று (வெள்ளிக்கிழமை) பிரித்தானியாவில் லண்டனில் பிரதமர் வாயில் தளத்தில் இடம்பெற இருக்கின்ற கவனவீர்ப்பு ஒன்றுகூடலில் நீதிக்காகக் குரல்கொடுக்க, கொரோனா வைரஸ் பெருந்தொற்று சுகாதாரக் கட்டுப்பாடுகளுக்கு அமைய மாலை 3 மணிக்கு அணிதிரளுமாறு நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அழைப்பு விடுத்துள்ளது.

தொடர்ந்து பன்னாட்டு வல்லுநர்கள் பங்கெடுக்கும் இணையவழி கருத்தாடல் நிகழ்வொன்று ஐரோப்பிய நேரம் மாலை 6 மணிக்கு இடம்பெற இருக்கின்றது.

'1983 ஈழத் தமிழர்களுக்கு எதிரான இனவெறித் தாக்குதலும் தமிழினப் படுகொலைக்கான திட்டமும்' எனும் தொனிப்பொருளில் இடம்பெற இருக்கின்ற இந்தக் கருத்தாடலை நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் வலைக்காட்சி www.tgte.tv ஊடாகவும், பிற ஊடகங்கள் வழியாகவும் காணமுடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# விளையாட்டுத்துறை அமைச்சருக்கு ஜப்பானியத் தூதரகம் வாழ்த்து



டோக்கியோவில் ஆரம்பமாகவுள்ள 2020 ஒலிம்பிக் போட்டிகளின் அங்குரார்ப்பண வைபவத்தில் பங்கேற்பதற்காக இலங் கையின் இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும், டிஜிட்டல் தொழில்நுட்பம் மற்றும் நிறுவன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான நாமல் ராஜபக்ஷவுக்கு கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதுவர் சுகியாமா அகிரா, தூதுக் குழுவின் பிரதித் தலைவரும் அமைச்சருமான கிட்டமுரா டொஷி ஹிரோ ஆகியோர் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

2021 ஜூலை 21 ஆம் திகதி டோக்கியோவுக்கு புறப்படும் முன்னர் அமைச்சரை சந்தித்து தமது நல்வாழ்த்துகளை தெரி வித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது, டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் 2020 இன் அங்குரார்ப்பண நிகழ்வில் பங்கேற்பதற்காக ஜப்பானுக்கு விஜயம் செய்யும் அமைச்சர் நாமல் ராஜபக்ஷவுக்கு, கிட்டமுரா தமது வாழ்த்துகளை தெரிவித்தார்.

அத்துடன் இந்தப் போட்டிகளில் பங்கேற்கும் இலங்கை அணியினருக்கும் வாழ்த்துகளைத் தெரிவித்திருந்தார். டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிகள் 2021 ஜூலை 23ஆம் திகதி முதல் ஒகஸ்ட் 8 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

பாராலிம்பிக் போட்டிகள் 2021 ஒகஸ்ட் 24 ஆம் திகதி முதல் செப்டெம்பர் 5 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளன.

கொவிட்-19 தொற்றிலிருந்து விடுபடுவதற்கான சர்வதேச கைகோர்ப்பின் அடையாளமாக இந்தப் போட்டிகள் அமைந்திருக்கின்றன என ஜப்பான் கருதுகின்றது. இந்தப் போட்டிகளை மிகவும் பாதுகாப்பானவையான முறையில் முன்னெடுப்பதற்கு இயலுமான சகல கடும் முற்காப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளது.

# உலக அளவில் 75 சதவீதம் கடந்த டெல்டா வகை கொரோனா வைரஸ்




## உலக சுகாதார அமைப்பு அதிர்ச்சித் தகவல்

உலகம் முழுவதும் கொரோனா நோயாளிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்டு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட கொரோனா வைரஸ்களில் 75 சதவீதத்திற்கும் மேற்பட்டவை டெல்டா வகையைச் சோந்தவையாக உள்ளன என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில், இந்தியா, சீனா, ரஷ்யா, இஸ்ரேல், பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளில் கடந்த 4 வாரங்களாக கொரோனா நோயாளிகளிடம் இருந்து சேகரிக்கப்பட்டு, டெல்டா வகை என்று உறுதி செய்யப்பட்ட கொரோனா மாதிரிகளின் எண்ணிக்கை 75% கடந்துள்ளது என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# சீனாவில் கொட்டித் தீர்த்த மழை சாவு எண்ணிக்கை 33 ஆக உயர்வு



உலகம் முழுவதும் கால நிலை மாற்றம் மிகப்பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகிறது. இந்த கால நிலை மாற்றம் காரணமாக பல்வேறு நாடுகளில் பருவங்கள் மொத்தமாக மாறி புயல், மழை, வெள்ளம் போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றன.

அண்மையில் மேற்கு ஐரோப்பியாவில் வரலாறு காணாத வகையில் கொட்டித் தீர்த்த கனமழையால் ஜேர்மனி, நெதர்லாந்து மற்றும் பெல்ஜியம் ஆகிய நாடுகள் கடும் பாதிப்பை சந்தித்தன.

இந்தநிலையில் சீனாவின் மத்திய பகுதியில் உள்ள ஹெனான் மாகாணத்தில் கடந்த 1,000 ஆண்டுகளில் இல்லாத வகையில் நேற்று ஒரே நாளில் கொட்டித்தீர்த்த கனமழையால் இங்குள்ள பல்வேறு நகரங்கள் முழுவதுமாக வெள்ளத்தில் மூழ்கின.

இதனிடையே மழை, வெள்ளம் தொடர்பான சம்பவங்களில் சிக்கி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 33 ஆக உயர்ந்துள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். 8 பேர் காணாமல் போய் விட்டனர். வெள்ளம் பாதித்த இடங்களில் இருந்து 3.76 லட்சம் பேர் வெளியேற்றப்பட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் மழை, வெள்ளத்தில் சிக்கிய மக்களை பத்திரமாக அப்புறப்படுத்தும் பணியில் இராணுவத்தினர் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர்.



# இங்கிலாந்தில் 1,500 முகக்கவசங்களை பயன்படுத்தி திருமண உடை தயாரிப்பு!

இங்கிலாந்தில் ஆயிரத்து 500 முகக்கவசங்களை பயன்படுத்தி இளம்பெண் அணியும் திருமண உடை அற்புதமாக உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் கொரோனாத் கட்டுப்பாடுகள் சமீபத்தில் முற்றிலுமாக தளர்த்தப்பட்டன. இதனை அந்நாட்டு மக்கள் உற்சாகத்துடன் கொண்டாடி வருகின்றனர்.

இந்நிலையில் அங்குள்ள ஆடை வடிவமைப்பாளர் Tom Silverwoo- என்பவர் மணப்பெண் அணிவதற்காக 1500 முகக்கவசங்களை பயன்படுத்தி திருமண உடை தயாரித்து கொடுத்துள்ளார்.

வெள்ளை நிற கவுன் வடிவில் உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆடையை Jemima Hambro என்ற மாடல் பெண் அணிந்துள்ள புகைப்படம் அதிகம் பேரால் சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டு வருகிறது.

# கரீபிய நாடுகளில் ஒன்றான ஹைத்தியில் அதிபர் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டம்



கரீபிய நாடுகளில் ஒன்றான ஹைத்தியில், அந்நாட்டு அதிபர் படுகொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதிபர் ஜோவினெல் மொய்செ(Jovenel Moise) கடந்த 7ஆம் திகதி அவரது வீட்டில் வைத்து படுகொலை செய்யப்பட்டார்.

அதிபருக்கு பாதுகாப்பு வழங்க பொலிஸார் தவறி விட்டனர் என குற்றம் சாட்டி, வடக்கு ஹைத்தியின் காப் ஹைடியென் (Cap Haitien) நகரில் பொதுமக்கள் போராட்டம் நடத்தினர்.

# உலகில் பயணத்திற்காக அதிகளவில் ஏற்கப்பட்ட தடுப்பூசி அஸ்ட்ரா ஜெனெகா

## ஆய்வில் தெரிவிப்பு




உலகளவில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கொரோனாத் தடுப்பூசி அஸ்ட்ரா ஜெனெகாவின் ஊசி தான் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

நாடுகளின் எல்லை கடந்த பயணங்களுக்கு இரண்டு தடுப்பூசி போட்டுக் கொள்ளும் பயணிகளுக்கு சலுகைகள் வழங்கப்படுகின்றன. இதில் அஸ்ட்ரா ஜெனெகாவே முன்னிலை வகிக்கிறது. கடந்த 2020 ஆம் ஆண்டில் சுற்றுலாத்துறை 74 சதவீத சரிவைக் கண்டது. உலகம் முழுவதும் தடுப்பூசி இயக்கம் வேகம் பெற்றுள்ள நிலையில் மீண்டும் பயணங்க ளுக்காக பலர் தயாராகி வருகின்றர்.

ஆனால் எல்லாவகையான தடுப்பூசிகளும் கடல்கடந்த நாடுகளுக்குச் செல்ல ஏற்கப்படுவதில்லை. ஐரோப்பிய யூனியன் இந்தியாவில் உற்பத்தியாகும் கொவிஷீல்ட்டை ஏற்க மறுத்தது. வெளிநாடுகளில் இருந்து வருவோரை தனிமைப்படுத்தப் போவதாக இந்தியா எச்சரித்ததையடுத்து 16 நாடுகள் கொவிஷீல்ட்டுக்கு ஒப்புதல்அளித்துள்ளன.



# நின்று கொல்லக்கூடிய புகையிலை பொருள்களின் விற்பனைக்குத் தடை

## தமிழக அமைச்சர் சுப்ரமணியன் உறுதி

குட்கா மற்றும் பான் மசாலாப் பொருள் களை விற்பனை செய்யும் கடைகளுக்கு சீல் வைக்க மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சுப்பிரமணியன் உத்தர விட்டுள்ளார். சட்ட விரோதப் போதைப் பொருள்களின் விற்பனையை ஒரே மாதத்தில் ஒழிக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

தமிழ்நாட்டில் புகையிலை அடங்கிய குட்கா பான்மசாலா பொருள்களின் விற்பனைக்கும் பயன்பாட்டிற்கும் 2013 ஆம் ஆண்டு தமிழக அரசு தடை விதித்தது. ஆனாலும் தடையில்லாமல் இந்தப் பொருள்களின் விற்பனை நடைபெறுவதாக வார இதழ் ஒன்று ஆய்வுச் செய்தி வெளியிட்டிருந்தது. அதனைத் தொடர்ந்து புகையிலை தடுப்பு மற்றும் நடவடிக்கைக்கான அவசர கலந்தாய்வுக் கூட்டத்தினை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் நடத்தினார்.

உணவுப் பாதுகாப்புத் துறை அதிகாரிகள், காவல்துறையினர் உள்ளாட்சித் துறை அதிகாரிகள், மாவட்ட வணிகர் சங்க நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர். அப்போது பேசிய அமைச்சர் மா.சுப்ரமணியன், கொரோனாத் தடுப்பில் அதிகமாக நேரம் செலவிட்டதால் புகையிலை தடுப்பில் கவனம் செலுத்த முடியவில்லை என்று தெரிவித்தார்.

இப்போது கொரோனாவின் தாக்கம் குறைந்துள்ளதால் நின்று கொல்லக்கூடிய புகையிலைப் பொருள்களின் மீது கவனம் செலுத்த வேண்டிய நேரம் வந்துவிட்டதாக கூறினார். தண்டனையைக்கடுமையாக்குவதன் மூலம் புகையிலை விற்பனையை கட்டுப்படுத்த முடியும் எனப் பேசிய அமைச்சர் மா.சுப்ரமணியன், குட்கா பான்மசாலா போன்ற பொருள்களை விற்கும் கடைகளுக்கு சீல் வைக்க உத்தரவிட்டார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வணிகர் சங்க பேரமைப்பின் தலைவர் விக்கிரமராஜா, உடனடியாக சீல் வைத்தால் பல வணிகர்கள் பாதிக்கப்படுவார்கள் என்றும் முதலில் நோட்டீஸ், இரண்டாவது முறை அபராதம் அதன் பின்னரும் விற்பனை தொடர்ந்தால் மூன்றாவது முறையில் சீல் வைப்பதை நடைமுறையில் வைத்துக் கொள்ளுங்கள் என்று கோரினார்.

விக்ரமராஜாவின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அமைச்சர் மா.சுப்ரமணியன் அதன்படி செயல்படுமாறு உணவுப்பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கும் காவல்துறையினருக்கும் உத்தரவிட்டார். பான் மசாலா விடயத்தில் தீவிரமாக செயல்பட்டு ஒரே மாதத்தில் புகையிலையை முற்றிலுமாக தமிழ்நாட்டில் இருந்து ஒழிக்க வேண்டும் என்றும் அமைச்சர் சுப்ரமணியன் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்தக் கூட்டம் முடிவடைந்ததும் ஊடகவியலாளர்களைச் சந்தித்துப் பேசிய அமைச்சர் மா.சுப்ரமணியன், 'பள்ளி, கல்லூரி மாணவர்கள்கூட புகையிலைப் பொருள்களைப் பயன்படுத்துவது வேதனை தரும் விடயமாக இருக்கிறது. எனவே, கல்வி நிலையங்களின் வாசல்களில் விழிப்புணர்வுப் பொம்மைகளை வைக்க உள்ளாட்சி அமைப்புகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறார்.

---

கொற்கை அகழாய்வுப் பணியில் சங்க காலத்தைச் சேர்ந்த

# ஏழு அடுக்கு செங்கல் கட்டடம் கண்டுபிடிப்பு



தமிழக தொல்லியல் துறை சார்பில் கொற்கையில் தொல்லியல் அகழாய்வு பணிகள் நடந்து வருகின்றன. கடந்த பெப்ரவரி 26 ஆம் திகதி தொடங்கிய இந்த அகழாய்வுப் பணி தொடர்ந்து 4 மாத காலமாக நடைபெற்று வருகிறது. இதற்காக கொற்கை ஊரின் மையப்பகுதியில் 17 குழிகள் அமைக்கப்பட்டுள்ளன. அகழாய்வு இயக்குநர் தங்கதுரை தலைமையில் இந்த அகழாய்வுப் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

இந்த ஆய்வின்போது நேற்றை தினம் ஒரு குழியில் 2,000 ஆண்டுகளுக்கு முன்பு சங்க காலத்தில் பயன்படுத்திய ஏழு அடுக்குகள் கொண்ட செங்கல் கட்டிடம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. தொடர்ந்து அதே குழியில், இரும்பு உருக்கு, கண்ணாடி மணிகள், வாழ்விடப் பகுதிகளை உறுதிப்படுத்தும் தொழிற்சாலைகள் இருந்ததற்கான அமைப்புகளும் கண்டுபிடிக்கப்பட்டதால் தொல்லியல் ஆய்வுப்பணிகள் குறித்த பகுதியில் பரபரப்படைந்துள்ளன.

---



# எதிர்க்கட்சிகளின் அமளி துமளியால் மக்களவை திங்கள் வரை ஒத்திவைப்பு

இந்திய நாடாளுமன்ற மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 19 ஆம் திகதி தொடங்கியது. கைப்பேசிகள் ஒட்டுக் கேட்க திட்டமிடப்பட்ட விவகாரம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை எழுப்பி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், முதல் நாளிலேயே நாடாளுமன்றம் முடங்கியது.

புதிய மத்திய மந்திரிகளைக்கூட பிரதமர் மோடியால் அறிமுகம் செய்து வைக்க முடியவில்லை. இரண்டாவது நாளாக கடந்த செவ்வாய்க்கிழமையும் நாடாளுமன்றம் எந்த அலுவலையும் கவனிக்க முடியாமல் முடங்கியது.

புதன்கிழமை பக்ரீத் விடுமுறையைத் தொடர்ந்து, நேற்று நாடாளுமன்றம் மீண்டும் கூடியது. எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி நீடித்ததால் நேற்று அவை நடவடிக்கை முடங்கியது. இந்த நிலையில், நான்காவது நாளாக இன்றும் மக்களவையில் உறுப்பினர்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

இதனால், மக்களவை திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்படுவதாக சபாநாயகர் அறிவித்திருக்கிறார்.

---

# பன்னீர் செல்வத்தின் வெற்றி செல்லாது என உத்தரவிடுக!

## சென்னை உயர்நீதிமன்றில் வழக்கு



தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் அடைந்த வெற்றி செல்லாது என அறிவிக்கக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு ஒன்று தொடரப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடந்த தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அ.தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் தொகுதியில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். அவரது வெற்றியை செல்லாதென அறிவிக்கக்கோரி, போடிநாயக்கனூர் தொகுதியைச் சேர்ந்த வாக்காளரான மிலானி என்பவர் தேர்தல் வழக்கு ஒன்றைத் தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு ஓரிரு நாள்களில் விசாரணைக்கு வர வாய்ப்புள்ளது. இதே மனுதாரர், ஏற்கனவே தேனி மக்களவைத் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளர் ரவீந்திரநாத் குமார் பெற்ற வெற்றியை செல்லாது என அறிவிக்கக்கோரி தொடர்ந்த வழக்கு நிலுவையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

---

# கைப்பேசிகள் ஒட்டுக்கேட்ட விவகாரம்; அமித்ஷா பதவி விலக வேண்டுமாம்

'பெகாசஸ்' என்ற மென்பொருளைப் பயன்படுத்தி கைப்பேசிகள் வேவு பார்க்கப்பட்ட விவகாரத்தில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பதவி விலக வேண்டும் என்று காங்கிரஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள் உள்ளிட்டோரின் கைப்பேசிகள் ஒட்டுக் கேட்கப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் எம்.பிக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது பேசிய ராகுல் காந்தி, 'பெகாசஸ்' இஸ்ரேலிய அரசால் ஆயுதமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் இது தீவிரவாதிகளுக்கு எதிராகவே பயன்படுத்தப்பட வேண்டும். பொதுமக்களையும் முக்கியஸ்தர்களையும் அல்ல என்று கூறினார்.

ஆனால், இந்தியப்பிரதமரும் உள்துறை அமைச்சரும் இதனை இந்திய அரசுக்கு எதிராகவும், நிறுவனங்களுக்கு எதிராகவும் பயன்படுத்தி உள்ளனர் எனவும் ராகுல் காந்தி குற்றஞ்சாட்டினார். மக்களின் குரல்களை எழுப்பும் எதிர்க்கட்சித் தலைவரானதனது கைப்பேசி ஒட்டுக்கேட்கப்பட்டது தனி உரிமை சம்பந்தப்பட்ட விடயம் அல்ல – மக் களின் குரல்கள் மீதான தாக்குதல் என்றும் ராகுல் சாடினார். இந்த விவகாரத்தில் பிர தமர் மோடிக்கு எதிராக உச்ச நீதிமன்றம் விசாரணை நடத்தப்பட வேண்டும் எனவும் ராகுல் காந்தி வலியுறுத்தினார்.



# சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கு நீதி கிடைக்க வேண்டும் கல்முனை பிராந்திய சமூக செயற்பாட்டாளர் வேண்டுகோள்




கடந்த 2021.07.15 ஆம் திகதி முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீனின் வீட்டில் வைத்து மர்மமான முறையில் மரணமான டயகம பிரதேசத்தை சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்திற்கான நீதி கிடைக்க வேண்டும் எனும் அடிப்படை யில் நானும் ஒரு சமூக செயற்பாட்டாளன் எனும் அடிப்படையில் இவ்முறைப் பாட்டை கையளித்தேன் என கல்முனை பிராந்திய சமூக செயற்பாட்டாளரான தாமோதரன் பிரதீபன் தெரிவித்தார்.

கல்முனை மனித உரிமைகள் ஆணைக் குழு கிளையில் முறைப்பாடொன்றை நேற்று பகல் பதிவு செய்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப் பில் கலந்துகொண்டு பேசிய அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், இந்த சிறுமியை சிறுவர் உரிமையை மீறி வேலைக்கமர்த்திய குற்றம் தொடர்பிலும் இந்த சிறுமி பல நாள்களாக பாலியல் ரீதியாகவும் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார் என வெளியாகும் செய்திகளின் பிரகாரம் அது தொடர்பிலும், சிறுமி தீயில் எரிந்து மரணமாகியுள்ளமை தொடர்பிலும் பக்கச் சார்புகளற்ற வகையில் நீதியான விசாரணைகள் செய்யப் பட்டு குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். அதோடு சிறுமியின் இழப்பிற்கான இழப்பீடு வழங்கப்பட வேண்டும்,சிறுவர் உரிமைகளும் மனித உரிமைகளும் காப்பாற்றப்பட வேண்டும் எனவும் கூறி தனது முறைப்பாட்டினை கையளித்துள்ளேன் என தெரிவித்தார். மேலும் வடக்கில் மாணவி வித்யா கொலை வழக்கில் எவ்வாறு பிரதேச, இன, மத பாகுபாடுகளின்றி சகலரும் ஒன்றிணைந்து குரல்கொடுத்தார்களோ அதே போன்று இவ்விடயத்திலும் சகலரும் ஒன்றிணைந்து குரல் கொடுக்க வேண் டும் என்றும் மலையக மக்களின் கல்வி மற்றும் சமூக மேம் பாட்டிலும் அரசியல் வாதிகளும், சமூக அமைப்புக்களும் கவனம் செலுத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

## மற்றுமொரு பெண் துஷ்பிரயோகம்; ரிஷாத்தின் மைத்துனர் நேற்று கைது

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரர் கைது செய்யப் பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டில் சிறுமி ஒருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விசார ணைகளுக்கு அமையவே மற்றுமொரு சம்பவம் தெரிய வந்துள்ளது.


இதன்போது, கடந்த 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற உறுப்பினரின் வீட்டில் பணி புரிந்து வந்த பணிப்பெண் ஒருவரை துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய சம்பவம் தொடர்பில் தெரிய வந்துள்ளது.

இது தொடர்பில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடக பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

44 வயதுடைய மதவாச்சி பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

22 வயதுடைய குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு அமைய குறித்த சம்பவம் தொடர்பில் தெரியவந்துள்ளது.

## 11 விளையாட்டு மைதானங்களுக்கு 5.5 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு



கிழக்கு மாகாணத்தில் உள்ள 11 விளையாட்டு மைதானங்களின் அபிவிருத்திக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ, 5.5 கோடி ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளார்

இதன்படி, ஒரு மைதானத்தின் அபிவிருத்திக்கு தலா 50 லட்சம் ரூபா வீதம் செலவு செய்யப்படவுள்ளது.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் மூலம் இவ் வேலைத்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படுகின்றன.

இந்த வேலைத்திட்டங்களை உடன் ஆரம்பித்து விரைவில் நிறைவு செய்யுமாறு, கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளருக்கு நிதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதற்கமைய, அம்பாறை – தமண அலஹேனை விளையாட்டு மைதானம், சம்மாந்துறை – நாவிதன்வெளி பொது விளையாட்டு மைதானம், பொத்துவில் – லாஹுகல பிரதேச சபை பொது விளையாட்டுமைதானம், கல்முனை – பொலிவேரியன் விளையாட்டு மைதானம், கல்குடா – பேத்தாளை பொது விளையாட்டு மைதானம் ஆகிய விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

மேலும், மட்டக்களப்பு – வேலூர் சக்தி பொது விளையாட்டு மைதானம், பட்டிருப்பு – முனைக்காடு பொது விளையாட்டு மைதானம், சேருவில – சேருவில பொது விளையாட்டு மைதானம், திருகோணமலை – அபயபுர பொது விளையாட்டு மைதானம், மூதூர் – மூதூர் பொது விளையாட்டு மைதானம், மூதூர் – கிண்ணியா பொது விளையாட்டு மைதானம் ஆகிய விளையாட்டு மைதானங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன

## கல்முனை தெற்கு பிரிவுக்கு நாளை முதல் தடுப்பூசி



கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாகத்தின் கீழுள்ள கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள மக்களுக்கான கொரோனாத் தடுப்பூசி வழங்கும் ஆரம்பக் கட்டப் பணிகள் நாளை சனிக்கிழமை கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஆரம்பிக்க இருக்கிறது என சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தெரிவித்தார்.

அவர் வெளியிட்டுள்ள அறிவித்தலில் சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் அவசர தேவையுடைய கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கும் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் மருதமுனை பிரதேச வைத்தியசாலையிலு, கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையிலும் தடுப்பூசிகள் போடப்பட உள்ளதுடன் அதே நாளில் நற்பிட்டிமுனை அல்–அக்ஸா மகா வித்தியாலயத்திலும், கல்முனை அல்– பஹ்ரியா தேசிய பாடசாலையிலும், மருதமுனை அல்– மதீனா வித்தியாலயத்திலும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அரச திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் என மக்களுடன் நேரடியாக பழக்கம் கொண்டிருக்கும் முன்னிலை உத்தியோகத்தர்களுக்கு தடுப்பூசிகள் வழங்கப்பட உள்ளன என தெரிவித்துள்ளார். மேலும் திங்கட்கிழமை முதல் முப்பது வயதுக்கு மேற்பட்டோருக்கு மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் தடுப்பூசிகள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரண்டு தினங்களில் இரண்டு லட்சம் சினோபோர்ம் கொரோனாத் தடுப்பூசிகள்




மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரண்டு தினங்களில் இரண்டு லட்சம் சினோபோர்ம் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன எனவும் அது கிடைத்த பின்னர் 30 வயதிற்கு மேற்பட்ட 88 வீதமானவர்களுக்கு செலுத்தக் கூடியதாக இருக்கும் எனவும் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்று முதல் மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் 30வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்படவுள்ளன எனவும் அதனால் மட்டக்களப்பில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்டவர்களில் 88 வீதமானவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். மட்டக்களப்பு மாவட் டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 28 கொரோனா தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் இருவர் மரணமடைந்துள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இது வரையில் 7,863கொரோனாத் தொற்றாளர்கள் இனங் காணப்பட்டுள்ளதுடன் 112பேர் மரணமடைந்துள்ளதுடன் 6,100பேர் குணமடைந்து வீடுசென்றுள்ளனர்.

கடந்தவாரம் 471 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரையில் 78,000தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளதுடன் 60வயதுக்கு மேற்பட்ட 90வீதமானவர்களுக்கு தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன எனவும் டாக்டர் மயூரன் தெரிவித்தார். அத்துடன் முறையான அனுமதி இன்றி மாகாணம் விட்டு மாகாணம் செல்வது தொடர்ந்து தடை செய்யப்பட்டுள்ளதாகவும், அதனை முறையாக கடைப்பிடித்து மாகாணம் விட்டு மாகாணம் செல்லவேண்டாம் என்றும் அவ்வாறு செல்பவர்களால்தான் டெல்டா வகையான கொரோனா வைரஸ் திரிவுகள் வருவதற்கு சந்தர்ப்பம் உள்ளதாகவும், வாறு செல்பவர்கள் அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் அனுமதி பெற்று செல்லுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு




# ஒலிம்பிக் திருவிழா ஆரவாரங்களின்றி இன்று ஆரம்பமாகிறது

உலகில் உள்ள அனைத்துவிதமான விளையாட்டுகளின் ரசிகர்களும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ள டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் உத்தியோகபூர்வமாக இன்று தொடங்குகின்றன.

கொரோனா பொது முடக்கத்தின் காரணமாக ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் போட்டிகள் ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் உள்ள ஒலிம்பிக் மைதானத்தில் இலங்கை நேரப்படி இன்று மாலை 4.30 மணிக்கு தொடக்கவிழாவுடன் ஆரம்பமாகியுள்ளன.

கொரோனா அச்சம் காரணமாக, ஒலிம்பிக் தொடர் முழுவதும் பார்வையாளர்களுக்கு அனுமதி அளிக்கப்படவில்லை. அதேநிலைதான் தொடக்க விழாவிலும் கடைப் பிடிக்கப்படுகிறது. குறைந்த அள வில் மிகமிக முக்கிய விருந்தினர்கள் மட்டுமே மைதானத்துக்குள் அனுமதிக்கப் பட்டனர்.

முன்னேறி செல்வோம், உணர்வால் இணைவோம் என்ற தலைப்பின் கீழ் சுமார் நான்கரை மணி நேரம் தொடக்கவிழாநிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. ஜப்பான் பேரரசர் நருஹிட்டோ போட்டிகளை முறைப்படி தொடங்கி வைத்திருக்கிறார். இதைத் தொடர்ந்து ஜப்பான் கலாசாரத்தை பிரதிபலிக்கும் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. பெரும்பாலான நிகழ்ச்சிகள் முன்னதாக பதிவு செய்யப்பட்டு ஒளிபரப்படுகின்றன.

வழக்கமாக ஆங்கில வரிசைப்படி நாடுகள் அணி வகுக்கும் நிலையில், இம்முறை ஜப்பானிய எழுத்து வரிசைப் படியே நாடுகள் அணிவகுக்கின்றன. 33 போட்டிகளில் 339 தங்கப் பதக்கங்களுக்காக பதினோராயிரத்துக்கும் அதிகமான வீர, வீராங்கனைகள் களத்தில் உள்ளனர்.

கொரோனா காரணமாக, ஒலிம்பிக் போட்டிகளில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. பதக்க அணி வகுப்பின்போது வீரர்கள் பதக்கங்களை தாங்களாகவே எடுத்து அணிந்து கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தப் பட்டுள்ளது. வழக்கமான ஆரவாரங்கள் ஏதும் இல்லாமல் வரலாற்றிலிருந்து முற்றிலும் வித்தியாசமாக டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுகின்றன.

## கொரோனா பாதிப்பால் மேற்கிந்தியத் தீவுகள் – ஆஸ்திரேலியா இரண்டாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி ஒத்திவைப்பு

மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் நிர்வாக ஊழியருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து ஆஸ்திரேலியா அணியுடனான இரண்டாவது ஒருநாள் போட்டி நாணயச் சுழற்சி நடைபெற்ற சில நிமிடங்களில் ரத்துச் செய்யப்பட்டுள்ளது.



மேற்கிந்தியத் தீவுகள், ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான ரி-20 கிரிக்கெட் தொடரில் 4-1 என்ற கணக்கில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றி பெற்றது. இதையடுத்து, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நடைபெற்றுவருகிறது.

இதன் முதல் போட்டியில் ஆஸ்திரேலிய அணி வென்ற நிலையில், இரண்டாவது ஒரு நாள் போட்டி இன்று நடைபெறுவதாக இருந்தது. போட்டி தொடங்குவதற்காக நாணயச் சுழற்சி நடைபெற்றது. இதில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது. போட்டி தொடங்குவதற்கு சில நிமிடங்களே எஞ்சியிருந்த நிலையில், மேற்கிந்தியத் தீவுகள் அணியின் நிர்வாக ஊழியர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது தொடர்பான முடிவுகள் கிடைக்கப்பெற்றன. இதையடுத்து, உடனடியாகப் போட்டி ஆரம்பமாவது நிறுத்தப் பட்டது.

வீரர்கள் அனைவரும் விடுதி அறைகளுக்குத் திரும்ப அனுப்பப்பட்டனர். அனைத்து வீரர்களுக்கும் மீண்டும் கொரோனாப் பரிசோதனை நடத்தப்படவுள்ளதாகவும் இதன் முடிவுகளின் அடிப்படையில் இரண்டாவது ஒருநாள் போட்டி எப்போது நடைபெறும் என்பது குறித்த விவரம் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரண்டாவது ரி-20 போட்டியிலும் வென்றது தென்னாபிரிக்கா
## தொடரை இழந்தது அயர்லாந்து

அயர்லாந்து அணிக்கெதிரான இரண்டாவது ரி-20 போட்டியில் தென்னாபிரிக்க அணி 42 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடரை தொடரில் ஒரு போட்டி மீதமிருக்கும் நிலையிலேயே தென்னாபிரிக்க அணி கைப்பற்றியுள்ளது.

பெல்பாஸ்ட் மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 159 ஓட்டங்களைச் சேர்த்தது. டேவிட் மில்லர் 75 ஓட்டங்களையும் முல்டர் 36 ஓட்டங்களையும் எடுத்தனர். அயர்லாந்து அணியின் ஸ்ரையலிங் மற்றும் மார்க் அடய்ர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 160 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய அயர்லாந்து அணி, 19.3 ஓவர்கள் நிறைவில் 117 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, தென்னாபிரிக்க அணி 42 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. அயர்லாந்து அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, ஷேன் கெற்கேட் 24 ஓட்டங்களையும் ஜோர்ஜ் டொக்ரெல் 20 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். தென்னாபிரிக்க அணியின் போர்ச்சுன் மற்றும் சம்ஸி இருவரும்




தலா 3 விக்கெட்டுக்களையும் ஹென்ரிக்ஸ் 2 விக்கெட்டுக்களையும் கைப் பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக டேவிட் மில்லர் தெரிவுசெய்யப்பட்டார். இருஅணிகளுக்குமிடையிலான மூன்றாவதும் தொடரின் இறுதியுமான போட்டி நாளை நடைபெறவுள்ளது.




## ஒலிம்பிக் வில்வித்தைப் பிரிவில் தென்கொரியா ஆதிக்கம்

டோக்கியோ ஒலிம்பிக் வில்வித்தைப் பிரிவில் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு தகுதி சுற்று இன்று காலை நடைபெற்றது. இதில் 64 பேர் கலந்து கொண்டனர். ஒரு சுற்றுக்கு 6 அம்புகள் என 72 முறை ஒவ்வொரு வீராங்கனைகளும் அம்புகளை எய்தனர்.

ஒலிம்பிக் வில்வித்தைப் போட்டிகளில் தொடர்ந்து தென் கொரியா ஆதிக்கம் செலுத்தி வருகிறது. இந்த முறை டோக்கியோ ஒலிம்பிக் பெண்கள் ஒற்றையர் வில்வித்தைப் போட்டியிலும் தென் கொரிய வீராங்கனைகள் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளனர்

ஆன் சான் - 680, ஜாங் மின்ஹீ - 677, காங் சே யங்-675 புள்ளிகளுடன் உள்ளனர். உக்ரைனின் லினா ஹெராசிமென்கோவின் 673 புள்ளிகள் என்ற 1996 ஆம் வருட ஒலிம்பிக் சாதனையை ஆன் சான் முறியடித்தார். தென் கொரிய பெண்கள் அணி 2,032 புள்ளிகளுடன் 2004 ஆம் ஆண்டுக்கான மொத்த அணித் தகுதிக்கான முந்தைய ஒலிம்பிக் சாதனையை முறியடித்தனர். வலென்சியா தலைமையிலான மெக்சிக்கோ அணி 1,976 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்தையும், அமெரிக்கா 1,970 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலுமுள்ளன.

## இந்திய அணியில் இன்னுமொருவருக்கு காயம்



இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கான இந்திய அணியில் இருந்த வாஷிங்டன் சுந்தர், காயம் காரணமாக அந்தத் தொடரில் இருந்து வெளியேறுகிறாா என்று தகவல் வெளியாகியுள்ளது. காயம் காரணமாக இவ்வாறு இந்திய அணியிலிருந்து வெளியேறும் மூன்றாவது வீரர் இவர். முன்னதாக, ஷுப்மன் கில், அவேஷ் கான் ஆகியோர் அவ்வாறு தொடரிலிருந்து வெளியேறினர்.

கவுன்டி லெவன் அணிக்கு எதிரான பயிற்சி ஆட்டத்தின்போது கவுன்டி செலக்ட் அணியில் இரு வீரர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட, அவர்களுக்குப் பதிலாக இந்திய அணியின் அவேஷ் கானும் வாஷிங்டன் சுந்தரும் விளையாடினர். போட்டியில் மொஹமட் சிராஜ் வீசிய வேகப்பந்து வாஷிங்டன் சுந்தரின் விரலில் பட்டதில் அவருக்கு எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது. அவர் மீண்டும் பந்துவீசும் நிலைக்கு முன்னேற குறைந்தது 5 வாரங்கள் ஆகலாம் என்பதால் தற்போது அவரும் நாடு திரும்ப இருக்கிறார் என இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வட்டாரங் களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

# கடலுக்கு திருப்பிவிடப்பட்ட கழிவு நீரே மீன் வளம் அழிவடையக் காரணமாம்!

## மீனவர்கள் குற்றச்சாட்டு

இலங்கையின் மீன் வளம் அழிவடைவதற்கு எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்த வெளியேறிய இரசாயனக் கசிவு காரணமல்ல எனவும், மாறாக நாடு முழுவதும் உள்ள கடலுக்கு அரசாங்கத்தால் திருப்பி விடப்பட்ட கழிவுநீர் அமைப்பே காரணமாக அமைந்துள்ளதாகவும் மீனவர் சங்கங்களின் பிரதிநிதிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

களனி ஆறு, தடுகம் ஓயா, மற்றும் முத்துராஜவல பிரதேசத்தில் கடலில் திருப்பி விடப்படும் கழிவு நீர் உள்ளிட்ட நாட்டில் உள்ள அனைத்து கழிவுநீர் அமைப்புகளும் கடலில் கலப்பதால் ஏற்படும் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் தவறியுள்ளதாக, அகில இலங்கை மீனவர்கள் தொழிற்சங்க அமைப்பின் தலைவர் அருண ரொசாந்த தெரிவித்துள்ளார்.

சிங்கப்பூர் நிறுவனத்துக்குச் சொந்தமான எக்ஸ்பிரஸ் பேர்ள் கடந்த ஜூன் மாதம் கொழும்பு கடற்கரையில் நங்கூரமிட்ட நிலையில் தீக்கிரையானது.

இந்நிலையில் அன்றைய தினம், நீர்கொழும்பு பிரஜைகள் கூட்டணி அறிக்கை ஒன்றை வெளியிட்டு, மனித உயிர்களுக்கும், கடல்வாழ் உயிரினங்கள், நீர்வாழ் தாவரங்கள் என அனைத்துக்கும் தீங்கு விளைவிக்கும் அமிலங்கள், இரசாயனங்கள் மற்றும் தீக்கிரையான பொருள்களின் பகுதிகள் கடலில் கலந்துள்ளமையால், விவரிக்க முடியாத சுற்றுச்சூழல் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்திருந்தது.

ஊடகங்கள் குறிப்பிடுவதுபோல், எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பலில் இருந்து இரசாயனப் பொருள் கடலுக்குள் கலந்திருந்தால், உயிரிழந்த ஆயிரக்கணக்கான மீன்கள் நீர்கொழும்பு மற்றும் சிலாபம் கடற்கரைகளில் கரையொதுங்கியிருக்க வேண்டும். - என அருண ரொசாந்த கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார். ஆமைகள் பெரும்பாலும் மீன்பிடி வலைகளில் சிக்கி உயிரிழக்கின்றன. கடல் கொந்தளிப்பு காலத்திலும் ஆமைகள் கரையொதுங்கும். அவ்வாறு இல்லாமல், இராசாயனங்களால் ஆமைகள் உயிரிழக்கின்றன எனத் தெரிவிக்கப்படும் கருத்தை ஒரு மீனவனாக நான் நம்பவில்லை. பேர்ள் கப்பலை விட அரசாங்கம் கடலில் அதிக இரசாயனங்கள் கலக்கச் செய்துள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு துறைமுக நகரம் கட்டுமானம் மற்றும் எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட மீனவர்களை விட அதிக பாதிப்புக்களை எதிர்நோக்கியுள்ள நாட்டிலுள்ள இரண்டு லட்சத்திற்கும் அதிகமான மீனவர்களில், சிறியளவிலான மீனவர்களே அதிகளவு பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும், எனினும் அவர்கள் தொடர்பில் அரசாங்கத்துக்கு எந்தவொரு திட்டமும் இல்லை எனவும் மீனவர் சங்கத் தலைவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

ஒவ்வொரு அரசாங்க திட்டத்திலும் சிறிய அளவிலான மீனவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். கப்பல் தீப்பிடித்த காரணத்தால் மீனவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படும்போதும்சிறிய அளவிலான மீனவர்களுக்கு அநியாயம் இடம்பெற்றது.

இழப்பீடாக அரசாங்கம் கோரிய 40 கோடி அமெரிக்க டொலர்களில், 36 லட்சம் அமெரிக்க டொலர்கள் பெறப்பட்டுள்ளன. சிறு அளவிலான மீனவர்களுக்கு ஒரு நாளுக்கு 1,750 ரூபா இழுவை படகு மீனவர்களுக்கு ஒரு நாளுக்கு 2 ஆயிரம் ரூபா என இழப்பீடு முன்மொழியப்பட்டுள்ளது.

பெரிய படகுகள் உள்ளவர்களுக்கு ஒரு நாளுக்கு 8 ஆயிரம் ரூபா மிகப் பெரிய வலை மீனவர்களுக்கு ஒரு நாளுக்கு 6 ஆயிரம் ரூபா எனவும், பத்து நாள்களுக்கு இது வழங்கப்படும் எனவும் குறிப்பிடப்படுகிறது' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மற்றும் பேராயரின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய குழுக்களால் இழப்பீடு வழங்கப்படுவதால், சிறு மீனவர்களுக்கு நியாயத்தை பெற்றுக்கொடுக்க அரசாங்கமும் கர்தினாலும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீனவர் சங்கத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

## காலியில் நேற்றிரவு துப்பாக்கிச் சூடு
### ஒருவர் காயம்

காலி - ஊருகஸ்மங்ஹந்திய - தேவத்த பிரதேசத்தில் நேற்று இரவு இடம்பெற்ற துப்பாக்கிப்பிரயோகத்தில் ஒருவர் காயமடைந்து வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவித்த பொலிஸார், 25 வயது இளைஞர் என்றும் தெரிவித்துள்ளனர். மேற்படி பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று இடம்பெற்றிருந்ததாகவும் இதில் ஒருவர் படுகாயமடைந்தார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## குழந்தையை பிரசவித்த தாய் கொவிட் தொற்றால் மரணம்!

கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிப் பெண் ஒருவர் குழந்தை பிரசவித்த பின்னர் கராபிட்டி வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

36 வயதான பெண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. குறித்த பெண் கடந்த 8 ஆம் திகதி ஹோமாகம வைத்தியசாலையில் இருந்து கராபிட்டி வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

எனினும், குறித்த பெண் கராபிட்டி வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் உயிரிழந்துள்ளார். 7 மாதக் குழந்தையை சிசேரியன் மூலம் பிரசவிக்க ஹோமாகம வைத்தியசாலை மருத்துவர்கள் நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இந்நிலையில், குழந்தை கோட்டை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறது. பிரேத பரிசோதனையில் கொவிட் நிமோனியா சிறுநீரக நோய்த் தொற்று காரணமாக இந்த மரணம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## மகளைக் காணவில்லையென தாய் பொலிஸில் முறைப்பாடு

முல்லைத்தீவு - மல்லாவி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தென்னியங்குளம் கிராமத்தில் மகள் காணாமல்போயுள்ளார் என அவரது தாயார் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் துணுக்காய் தென்னியங்குளம் கிராமத்தில் பெற்றோருடன் வசித்து வந்த யுவதி ஒருவரே இவ்வாறு காணாமல்போயிருக்கிறார் எனத் தாயாரால் மல்லாவி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளை மல்லாவி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## கொரோனாத் தொற்றால் அதிகளவு ஆண்கள் காவு

இலங்கையில் கொவிட்-19 நோய்த்தொற்று காரணமாக உயிரிழந்தவர்களில் பெரும்பாலோர் ஆண்கள் என்று தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 75 வீதமானவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் எனவும், 24 வீதம் பேர் 30 முதல் 59 வயதுக்கு உட்பட்டவர்கள் எனவும், 1.2 வீதம் பேர் 30 வயதிற்குட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்றைய தினம் 1,714 பேர் கொவிட் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதற்கமைய நாட்டில் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 91 ஆயிரத்து 291 ஆக அதிகரித்துள்ளது. இதனிடையே, மாத்தளை மாவட்டத்தின் இரு பிரதேசங்கள் இன்று (வெள்ளிக்கிழமை) காலை 6 மணி முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

போகஹகொட்டுவ கிராம சேவகர் பிரிவின் அகலவத்த கிராமம் மற்றும் ஹரஸ்கம கிராமம் ஆகிய பிரதேசங்களே இவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுமி ஹிஷாலினியின் மரணம் தொடர்பில் மேலும் இரு பெண்களிடம் விசாரணை

முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணிப் பெண்ணாகக் கடமையாற்றிய நிலையில், தீ காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சிறுமியின் மரணம் தொடர்பில் கடந்த புதன்கிழமை 6 பேரிடம் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், நேற்று (வியாழக்கிழமை) பொரள்ளை பொலிஸ் நிலையத்தில் ரிஷாத் பதியுதீனின் மனைவி உள்ளிட்ட மூன்று பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது, சிறுமியின் தாயிடம் மேலதிக வாக்குமூலமொன்றும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதுடன், சிறுமியின் சித்தப்பா, சகோதரன் மற்றும் சகோதரி ஆகியோரிடமும் வாக்குமூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை, குறித்த சிறுமிக்கு முன்னதாக, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் டயகம பகுதியைச் சேர்ந்த மேலும் இரண்டு பெண்கள் கடமையாற்றியுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிடுகின்றார்.

குறித்த இரண்டு பெண்களையும், சிறுமியை அழைத்து வந்த நபரே, ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு அழைத்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு ரிஷாத் பதியுதீனின் வீட்டில் முன்னதாக கடமையாற்றிய இரண்டு பெண்களிடமும் டயகம பகுதியில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்து கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் இதற்கு முன்னர் கடமையாற்றிய டயகம பகுதியைச் சேர்ந்த இரண்டு பெண் களின் வாக்குமூலத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளன என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிடுகின்றார். இந்தச் சம்பவம் தொடர்பில் கொழும்பு தெற்கு குற்றப் புலனாய்வு பிரிவு மற்றும் பொரள்ளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.07.2021இல் வெளியிடப்பெற்றது.